**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 488/2021**

**DW1 – திருமதி. விஜயா, க/பெ.தேவராஜ்**

**19.07.2024**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.த.சா.ஆ.2 ன் படி முதல் வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். என் கணவர் தேவராஜ் இறந்தபிறகு முதல் வாதியிடம் அனுமதி பெற்று இரண்டாம் தளத்தில் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல. 2021 வருடம், அக்டோபர் மாதத்தில் அந்த அனுமதியை ரத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. அனுமதி எனக்கு கொடுத்தார்கள் என்றாலும் அந்த இரண்டாம் தளத்தில் என்னுடைய பெற்றோர் மற்றும் என் உடன் பிறந்தவர்களை தங்க வைத்துள்ளேன் என்றால் நான் வேலைக்கு செல்லும் சமயத்தில் என் குழந்தையை கவனிக்க என் தாயார் குடியிருந்து வருகிறார். வா.த.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பு படி நான் குடியிருந்து வரும் அனுமதியை வாதி ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் கொடுத்து பின்னர் திருமங்கலம், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை நடந்து அவர்கள் விசாரணை முடிந்து என்னிடம் சாவியை கொடுத்தார்கள். விசாரணைக்கு வாதியும் வந்திருந்தார். ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என்னிடம் தான் உள்ளது. வா.த.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் கொடுத்தேனா என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் கொடுத்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் முதல் வாதி அனுமதியை ரத்து செய்துவிட்டார் என்றாலும் நான் மேற்கொண்டு குடியிருக்க மாதம் ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் இதுவரை மின்கட்டணம், பராமரிப்பு கட்டணம் செலுத்தாததால் ரூ.17,000/- பாக்கி உள்ளது என்றால் நான் தற்போது

வேலைக்கு செல்லவில்லை. என்னிடம் கேட்டார்கள், வருமானம் இல்லை என்று கூறினேன். மின்சார கட்டணம் கேட்டு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் மின்கட்டணம், வீடு பராமரிப்பு கட்டணம், தண்ணீர் கட்டணம், வீடு வாடகை ஆகியவற்றை கேட்டு அனுப்பினார்கள். எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் என்னால் வேலைக்கு செல்ல முடியவில்லை. நான் மின்கட்டணம் மட்டும் தருவதாக கூறினேன். என்னிடம் காட்டப்படும் கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த கடிதம் வா.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்து எனது கணவர் தேவராஜிற்கு சொந்தமானது என்று இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. ஆனால், அந்த கட்டிடத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் என் கணவர் கட்டியது தான். மூன்று தளங்கள் கட்டிய பிறகுதான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கிரைய ஆவணம் கொடுத்தார்கள் என்றால் என் கணவர் 8வது வகுப்பு வரை தான் படித்துள்ளார். சிறு வயதிலேயே அவர் தந்தையுடன் வேலைக்கு சென்றார்.

**( Mediation க்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.